## வேதாகம ஆய்வு: கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படைகள்

*இந்த வேதாகம ஆய்வு அருள்திரு. டெரிக் பிரின்ஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது. இது டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள் இந்தியாவின் அனுமதியுடன் பயன்படுத்தப்படுகின்றது.*

---

*கிறிஸ்தவராக இருப்பது என்றால் என்ன என்னும் எளிதான ஒரு வாக்கியம் யோவான் 10:27 இல் உள்ளது. அது இயேசுவின் வார்த்தையைக் கேட்டும் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்லுகின்றது. இயேசுவானவர் தனது சீஷர்களுக்கு அனேக காரியங்களைக் கற்றுக் கொடுத்தார். அவர்கள் அதனை செயல்படுத்தினார்கள். அப்படியே செய்ய வேண்டும் என்று மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்தனர். இதுவே கிறிஸ்தவ வாழ்வு. விசுவாசிகள் இந்த கிறிஸ்தவ வாழ்வைப் புரிந்துக் கொண்டு அதனைச் செயல்படுத்தாதவரை அவர்கள் கிறிஸ்தவர்களாக முடியாது. கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை எபிரேயர் 6:1-2 இல் சுருக்கமாகக் கூறப்பட்டு உள்ளது.*

***எபிரேயர் 6:1-3*** வாசியுங்கள்

*கிறிஸ்தவ வாழ்வின் 7 அடிப்படை அம்சங்கள் எபிரேயர் 6:1-2 இல் அட்டவணைப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இந்த வேதாகம ஆய்வில், இந்த ஒவ்வொரு அம்சங்களையும் நாம் விவரமாகக் காண்போம். உங்களை நிதானிக்க சில கேள்விகளை உங்களிடம் கேட்போம்.*

*அந்த கேள்விகளுக்கான பதில்களை அந்த கேள்விகளில் தரப்பட்டு இருக்கும் வேதாகம வார்த்தைகளில் கண்டு கொள்ள முடியும். எங்களது பதில்களை பின்னே நீங்கள் காண்பீர்கள்.*

**1. கர்த்தர் மீது விசுவாசம் வைப்பது**

*அ) இயேசுவானவர் மக்களிடம் என்ன செய்ய சொன்னார்? மாற்கு 1:14-15*

*1)........................................................................ 2)........................................................................*

*ஆ) இயேசுவைப் பற்றிய 4 முக்கியமான உண்மைகள் என்ன?*

*1) ........................................................ மத்தேயு 3:16-17; லூக்கா 9:35*

*2) ........................................................................ 1 கொரிந்தியர் 15:3*

*3) ........................................................................ 1 கொரிந்தியர் 15:4*

*4) ........................................................................ 1 கொரிந்தியர் 15:4*

*இ) இயேசுவைப் பற்றிய இந்த முக்கியமான உண்மைகளை நாம் நம்பும் போது என்ன நடக்கின்றது? ரோமர் 1:17; ரோமர் 4:20-25*

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

*ஈ) நன்மையான செயல்கள் கர்த்தருடன் நம்மை சரிப்படுத்துமா? எபேசியர் 2:8-9 ஆம்/ இல்லை*

*சிந்தனைக்கு:*

*இயேசுவைப் பற்றிய இந்த நான்கு உண்மைகளை நீங்கள் உண்மையாகவே நம்புகின்றீர்களா?*

*உங்களது குறிப்பிட்ட பாவங்களை அறிக்கை செய்து உங்களிடம் இருந்து அநீதியை அகற்ற இயேசுவானவரைக் கேட்டு இருக்கின்றீர்களா?*

*நீங்கள் மற்ற மக்களிடம் நடந்து கொள்ளும் விதத்தை வைத்தேனீங்கள் இயேசுவின் சீஷர் என்பதை மக்கள் அறிந்து கொள்கின்றார்களா?*

*நீங்கள் இன்னும் எதில் இருந்தெல்லாம் மனம் திரும்ப வேண்டும் என்றும், அவர் உங்களை இன்னும் எப்படி மாற்ற வேண்டும் என்றும் விரும்புகின்றார் என்று இயேசுவானவரிடம் ஜெபித்து கேளுங்கள்.*

**2. செத்த கிரியைகளில் (அல்லது பொல்லாத செயல்கள்) இருந்து மனம் திரும்புதல்**

*அ) மனம் திரும்புதல் என்றால் என்ன? (மத்தேயு 3:11; லூக்கா 3:8; 2 கொரிந்தியர் 7:9-10)*

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

*ஆ) செத்த கிரியைகள் என்றால் என்ன? எபிரேயர் 6:1; ஏசாயா 64:6; லூக்கா 6:46-49.* ............

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

*இ) செத்த கிரியைகளில் இருந்து மனம் திரும்புவது எப்படி? ஏசாயா 15:11-21; 1 யோவான் 1:8-9* ............................................................................................................................

........................................................................................................................................................................

*உ) இயேசுவின் மீது விசுவாசம் வைத்து, நாம் மனம் திரும்புவதினால் எத்தகைய செயல்கள் உண்டாகும்? அப்போஸ்தலர் 2:38,42-47; யோவான் 13:34-35; யோவான் 14:12*.........................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

*சிந்தனைக்கு:*

*நீங்கள் செய்த தவறு அல்லது உங்களிடம் இருந்த தவறான என்ணங்கள் ஆகியவைகளை அறிக்கை செய்து அவரிடம் மன்னிப்பு கேட்கும் வகையில் போதுமான அளவிற்கு குற்ற உணர்வு பெற்று இருக்கின்றீர்களா?*

*கர்த்தர் உங்களிடம் ஏதாகிலும் கூறியது உண்டா? நீங்கள் அவருக்குக் கீழ்படிகின்றீர்களா?*

*அவர் உங்களிடம் செய்ய சொல்லி இராத ஒன்றை செய்ததற்கு அவரிடம் உங்களை மன்னிக்கும்படியாக கேட்டு இருக்கின்றீர்களா?*

**3. விசுவாசிகளின் தண்ணீர் ஞானஸ்நானம்**

*அ) 'விசுவாசிகளின் தண்ணீர் ஞானஸ்நானம்' எப்படி செய்யப்படுகின்றது? மத்தேயு 28:19; அப்போஸ்தலர் 8:37-38; அப்போஸ்தலர் 10:48*

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

*ஆ) தண்ணீர் ஞானஸ்நானம் எதனை அடையாளப்படுத்துகின்றது? ரோமர் 6:4-5; கொலோசெயர் 2:12*

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

*இ) இயேசுவைப் பொறுத்தமட்டில், யார் ஞானஸ்நானம் பெற முடியும்? மத்தேயு 28:19; மாற்கு 16:16* ..............................

..............................

..............................

*சிந்தனைக்கு:*

*நீங்கள் உண்மையாகவே இயேசுவை விசுவாசித்த பிறகு தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற்றீர்களா?*

**4. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்**

*அ) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்றால் என்ன? அப்போஸ்தலர் 1:8; அப்போஸ்தலர் 4:31; அப்போஸ்தலர் 10:44-46.*

..............................

..............................

..............................

*ஆ) பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன?*

*அப்போஸ்தலர் 1:8; அப்போஸ்தலர் 4:31-33; ரோமர் 8:26-27*

..............................

..............................

..............................

*இ) பரிசுத்த ஆவியானவரால் தரப்பட்ட 9 ஈவுகள் என்ன?1 கொரிந்தியர் 12:7-11* ..............................

..............................

..............................

..............................

*ஈ) பரிசுத்த ஆவியின் கனி என்ன?கலாத்தியர் 5:22-23* ..............................

..............................

..............................

*உ) ஈவுக்கும் கனிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?*..............................

..............................

..............................

*சிந்தனைக்கு:*

*நீங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்று இருக்கின்றீர்களா?*

*அப்படி இல்லை என்றால், ஆலோசனையாகத் தரப்பட்ட பதில்களுடன் ஒரு உதாரண ஜெபம் பின்னே தரப்பட்டு இருக்கின்றது.*

*பரிசுத்த ஆவியின் எந்த ஈவை நீங்கள் (அல்லது இன்னும் அதிகமாக) விரும்புகின்றீர்கள்?*

*பரிசுத்த ஆவியின் கனி உங்கள் வாழ்வில் மேம்படுகின்றதா? நீங்கள் இயேசுவைப் போன்று அதிகம் அதிகமாக மாற பரிசுத்த ஆவியானவர் அனுமதிக்கும் போது அது உங்களது வாழ்வில்*

ஒவ்வொரு வருடமும் இன்னும் அதிகமாகத் தெரிய வேண்டும்.

**5. கைகளை வைத்தல்**

*அ) "கைகளை வைப்பதின்" நான்கு வித்தியாசமான நோக்கங்கள் என்ன?*

*நோக்கம் 1 (மாற்கு 10:16)* ................................................................

*இதனை யார் செய்வது?* ................................................................

*நோக்கம் 2 (மாற்கு 16:18)* ................................................................

*இதனை யார் செய்வது?* ................................................................

*நோக்கம் 3 (அப்போஸ்தலர் 19:6)* ................................................................

*இதனை யார் செய்வது?* ................................................................

*நோக்கம் 4 (அப்போஸ்தலர் 13;2-3)* ................................................................

*இதனை யார் செய்வது?*

*சிந்தனைக்கு:*

*கைகளை வைப்பதின் எந்த நோக்கத்தை நீங்கள் கவனித்து இருக்கின்றீர்கள் அல்லது அனுபவித்திருக்கின்றீர்கள்?*

**6. மரித்தோரின் உயிர்த்தெழுதல்**

*அ) மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்றால் என்ன? யோவான் 5:29-29; 1 தெசலோனிக்கேயர் 4:13-18* ................................................................

................................................................

................................................................

*ஆ) நமது உயிர்த்தெழுந்த சரீரம் எப்படி இருக்கும்? 1 கொரிந்தியர் 15:51-55; பிலிப்பியர் 3:20-21*

................................................................

................................................................

................................................................

*இ) உயிர்த்தெழுதலின் சிறப்பான முக்கியத்துவம் என்ன? ரோமர் 1:4, ரோமர் 10:9* ........................

................................................................

................................................................

................................................................

*சிந்தனைக்கு:*

*இயேசுவானவர் உயிர்த்தெழுந்தார் என்று நம்புகின்றீர்களா?*

*இயேசுவானவர் மகிமையில் திரும்பி வரும் போது நீங்களும் உயிர்த்தெழுவீர்கள் என்று நம்புகின்றீர்களா?*

*இயேசுவை முக முகமாய் சந்திப்பது குறித்து சந்தோசமடைகின்றீர்களா?*

**7. நித்தியத் தீர்ப்பு**

அ) நம்மை நியாயந்தீர்க்க கர்த்தர் யாரை நியமித்து இருக்கின்றார்? அப்போஸ்தலர் 10:42-43; வெளிப்படுத்தல் 1:12-16

ஆ) இயேசுவின் விசுவாசிகள் எதற்காக நியாயந்தீர்க்கப்படுவார்கள்?

1. மத்தேயு 28:18-20; 2 கொரிந்தியர் 5:10-11

2. நீதிமொழிகள் 19:17; மத்தேயு 25:31-40 (41-46); லூக்கா 12:32-34

3. மத்தேயு 12:33-37; கலாத்தியர் 5:19-23; கலாத்தியர் 6:7-10

இ) தேசங்கள் எதற்காக நியாயந்தீர்க்கப்படுவார்கள்? யோவேல் 3:1-2; ஒபதியா 15; மத்தேயு 25:31-46

ஈ) அவிசுவாசிகள் எதற்காக நியாயந்தீர்க்கப்படுவார்கள்? மத்தேயு 16:27; வெளிப்படுத்தல் 20:11-15

உ) நித்திய நியாயத்தீர்ப்பு எப்போது உண்டாகும்? மத்தேயு 24:14, 42-44; மத்தேயு 25:13

*சிந்தனைக்கு:*

*நியாயத்தீர்ப்பின் நாளில் இயேசுவின் முன்பாக நிற்க நீங்கள் ஆயத்தமா?*

*நீங்கள் உங்களிடம் இயேசுவானவர் செய்ய சொன்னதை செய்து இருக்கின்றீர்களா?*

*இயேசுவானவருக்குப் பணிவிடை செய்வதால் எதைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கின்றீர்கள்? உங்கள் சுய திருப்தி மற்றும் மகிமைக்காக நீங்கள் இயேசுவிற்குப் பணிவிடை செய்கின்றீர்களா? அல்லது இயேசுவானவரை மகிமைப்படுத்தி, அவர் மீது இருக்கும் உண்மையான அன்பினால் அவரது சித்தத்தினை மட்டும் தேடுகின்றீர்களா?*

*உங்களது சுய பெலத்தினால் கர்த்தரை சேவிக்க முயற்சி செய்கின்றீர்களா அல்லது பரிசுத்த ஆவியினால் திறன்மேம்படுத்தப்பட்டு இருக்கின்றீர்களா?*

*இந்த ஆய்வில் நாம் கிறிஸ்தவ விசுவாசத்தின் 7 அடிப்படை அம்சங்களைப் பார்த்திருக்கின்றோம். இந்த அடிப்படையான போதனையில் அதிகமானது உள்ளது! நாம் இன்னும் கண்டுபிடிக்க அதிகமானது இருக்கின்றது என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகின்றார்! பிலிப்பியர் 3:12-14*

*"சகோதரரே, சகோதரிகளே, சந்தோசமாய் இருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள், ஏக சிந்தையாயிருங்கள், சமாதானமாய் இருங்கள். அப்பொழுது அன்புக்கும், சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்.' 2 கொரிந்தியர் 13:11*

**ஆலோசனை பதில்கள்:**

**1 ஆம் கேள்விக்குப் பதில்:** *கர்த்தரில் விசுவாசம்*

***அ)*** *இயேசுவின் முதலாவது அறிவுரை எவை என்றால்: 1) மனம் திரும்புங்கள் 2) சுவிசேஷத்தை நம்புவது*

***ஆ)*** *'சுவிசேஷம்' பற்றிய உண்மைகள் என்னவென்றால்: 1) இயேசுவானவர் தேவனுடைய குமாரன்; 2) இயேசுவானவர் நமது பாவங்களுக்காக மரித்தார். 3) இயேசுவானவர் அடக்கம்பண்ணப்பட்டார். 4) பிதாவானவர் அவரை மூன்றாம் நாள் எழுப்பினார்.*

***இ)*** *சுவிசேஷத்தின் இந்த நான்கு உண்மைகளை நாம் நம்பும்போது நீதிமான்களாகக் கருதப்படுகின்றோம். இயேசுவின் மீது விசுவாசம் வைப்பது என்பது இயேசுவானவர் இருக்கின்றார் என்று நம்புவதை விட மேலானது. நாம் அதனை செயல்படுத்த வேண்டும். நாம் பாவமான வழிகளையும், செத்த கிரியைகளையும் விட்டு மனம்திரும்பி, நம்மை ஆளுகைசெய்யும்படியாய் பிதாவினால் நியமிக்கப்பட்ட இயேசுவிற்கு நமது வாழ்வினை அர்ப்பணிக்க வேண்டும்.*

***ஈ)*** இல்லை நம்மை நாமே நீதிமான்களாக்க முடியாது. இயேசுவின் மீது உள்ள விசுவாசத்தினாலேயே நீதிமான்களாக்கப்படுகின்றோம்.

**2 ஆம் கேள்விக்கான பதில்: செத்த கிரியைகளில் இருந்து மனம் திரும்புவது**

***அ)*** *மனம் திரும்புதல் என்னும் வார்த்தை 'திசை மாற்றத்திற்கு வழி நடத்தும் ஒரு மன மாற்றம்' என்று விவரிக்கப்படலாம். மனம் திரும்புதல் என்பது ஒருவர் தனது பாதைகள் தவறு என்பதை அறிந்து கொண்டு, அந்த வழிகளில் நடப்பதை நிறுத்த முடிவு செய்து, இயேசுவிற்கு நேராகத் (அவரது சத்தத்தைக் கேட்டு, அவரைப் பின்பற்றி) திரும்புவதே.*

***ஆ)*** *செத்த கிரியைகள் என்பது வாழ்விற்கும் நித்தியத்திற்கும் நேராக வழி நடத்தாத செயல்கள் ஆகும். இந்த செத்த கிரியைகள் என்பது கர்த்தர் நம்மிடம் செய்ய வேண்டும் என்று சொல்லி இராத செயல்கள். பொல்லாத நினைவுகள் மற்றும் செயல்களுடன், 'செத்த கிரியைகள்' என்பது கர்த்தர் நம்மிடம் செய்ய வேண்டும் என்று சொல்லி இராத சில 'நல்ல' செயல்கள். நம்முடைய சில சிறப்பான முயற்சிகள் கூட கர்த்தருக்குக் குப்பையாகத் தோன்றலாம். கர்த்தர் பல விதங்களில் பேசுகின்றார். நாம் அவரைக் கவனித்து அவர் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகின்றாரோ அதனை செய்ய வேண்டும் என்று விரும்புகின்றார்.*

***இ)*** *நாம் நமது குறிப்பிட்ட பாவங்களை கர்த்தரிடம் அறிக்கை செய்யும் போது அவர் மன்னிப்பதாக வாக்குப்பண்ணுகின்றார். தொலைந்து போன குமாரனைப் போன்று, நாமும் (1) பாவம் செய்திருக்கின்றோன் என்பதை உணர வேண்டும் (2) மனதை மாற்றி, நமக்காக வாழுவதை நிறுத்த வேண்டும் (3) திரும்பி கர்த்தரிடமாக வர வேண்டும்.*

***ஈ)*** *நாம் இயேசுவிடம் அர்ப்பணிக்கையில், அவர் நமது இதயத்தை மறுரூபப்படுத்தி, நம்மை அவரைப் போல் மாற்றுவார். இதன் காரணமாய் நாமும் ஒருவரை ஒருவர் நேசிப்போம். நாம் ஒருவரை ஒருவர் நேசிப்பதினால் நாம் இயேசுவின் சீஷர்கள் என்று மக்கள் அறிந்து கொள்வார்கள். நாமும் கர்த்தருடைய வார்த்தையைத் தியானித்து அவரை இணைந்து ஆராதித்து, ஒருவருடன் ஒருவர் எப்போதும் உணவைப் பகிர்ந்து கொண்டு, மற்றவர்களுடன் கர்த்தருடைய பந்தியைப் பகிர்ந்து கொண்டு, ஏழைகளுக்கு உதவி செய்து, நமக்கு இருக்கின்றதை தேவையுடன் இருப்பவர்களுக்குக் கொடுத்து வாழுவோம். நம்மிடம் இருக்கும் கர்த்தருடைய வல்லமை மக்களுக்கு முன்பாகக் காண்பிப்போம். நம்முடைய வாழ்வும் மற்றவர்கள் இயேசுவை நம்பும்படியாக உற்சாகப்படுத்தும்.*

**3 ஆம் கேள்விக்குப் பதில்:** ***விசுவாசிகளின் ஞானஸ்நானம்***

***அ)*** *ஒரு விசுவாசி தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டும். அவர்களது முழு*

சரீரமும் தண்ணீரில் மூழ்கி அவர்கள் தண்ணீரில் இருந்து எடுக்கப்பட வேண்டும்.

***ஆ)*** விசுவாசிகளின் ஞானஸ்நானம் என்பது இயேசுவானவர் மரித்து, நமது பாவங்களுக்காக அடக்கம்பண்ணப்பட்டு, ஒரு புதிய வாழ்விற்குள் உயிர்த்தெழுந்ததை பறைசாற்றுகின்றது. ஒருவர் தண்ணீரில் மூழ்கும் போது (அடக்கம் செய்யப்படும் போது), அவர்கள் தங்களை கிறிஸ்துவின் மரணம் மற்றும் அடக்கம் செய்யப்படுதலுடன் அடையாளப்படுத்துகின்றனர். அவர்கள் தண்ணீரில் இருந்து எழும்புவது அவர்கள் இயேசுவிற்குள் ஒரு புதிய வாழ்விற்குள் எழும்புவதை விவரிக்கின்றது.

***இ)*** எல்லா தேசங்களின் சீஷர்களும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டும். சீஷர்கள் என்பவர்கள் இயேசுவை விசுவாசித்து, இயசுவை நம்பி, அவரால் சீஷத்துவப்படுத்தப்பட்டு, அவரால் பயிற்சி பெற்றவர்கள்.

***குறிப்பு:*** ஒரு விசுவாசி "பிதா குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுகின்றார். அது கிறிஸ்தவன் மீது இடப்படும் ஒரு முத்திரை. விசுவாசிகள் 'கிறிஸ்துவில்' ஞானஸ்நானம் பெற்று அவரது சரீரத்தில் அங்கமாகி, உலக அளவிலான சபையுடன் இணைக்கப்படுகின்றனர்.

***எச்சரிக்கை:*** நீங்கள் ஞானஸ்நானம் பெற்ற போது மீண்டும் பிறந்த அனுபவம் பெற்று இருக்கவில்லை என்றால், நீங்கள் இயேசுவின் விசுவாசத்திற்குள் மீண்டும் வந்த பின்பு மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டும்.

**4 ஆம் கேள்விக்குப் பதில்: <u>பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்</u>**

***அ)*** *பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது விசுவாசியின் மீது பரிசுத்த ஆவியானவர் வல்லமையுடன் வருவது ஆகும். ஒரு புதிய ஜெப பாஷையே அதற்கு முதல் அடையாளம். (அது 'ஆவியில் ஜெபித்தல் அல்லது 'அந்நிய பாஷையில் பேசுதல்' என்றும் அழைக்கப்படும்)*

***ஆ)*** *பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நாம் இயேசுவைப் பற்றி சாட்சி கூற பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொள்ள உதவுகின்றது.*

***இ)*** *பரிசுத்த ஆவியின் ஈவுகள்: ஞானம், வெளிப்பாடு (அறிவின் வார்த்தைகள்), விசுவாசம், சுகம், அற்புதங்கள், தீர்க்கதரிசனம், ஆவிகளைப் பகுத்து அறிதல், அந்நிய பாஷைகளில் பேசுதல், மேலும் பேசப்பட்டதை வியாக்கியானம் செய்வது என்பதாகும்.*

***ஈ)*** *பரிசுத்த ஆவியின் கனிகள்: அன்பு, சந்தோசம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், சாந்தம், விசுவாசம், இச்சையடக்கம் என்பவைகளே. இதுவே இயேசுவானவரின் குணாதிசயம்.*

***உ)*** *ஈவுகளுக்கும் கனிகளுக்கும் வித்தியாசம் உண்டு. ஈவுகள் பரிசுத்த ஆவியினால் தரப்படுகின்றது. கனிகள் என்பது நாம் நம்மை பரிசுத்த ஆவியானவருக்கு அர்ப்பணிக்கும் போது மெதுவாக நம்மில் உண்டாகின்றது. அதிகமான ஈவுகளை உடைய மக்கள் அதிகமான கனிகள் கூட இல்லாமல் இருக்கலாம்! அன்பு என்னும் கனியே மிகவும் முக்கியம். காரணம் அது நித்தியம் வரை செல்லக் கூடியது. (1 கொரிந்தியர் 13:8-10 மற்றும் 13)*

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுவதற்கு கேட்கும்படியாக உங்களுக்கு உதவ ஒரு உதாரண ஜெபம்:

"ஆண்டவராகிய இயேசுவே, நான் உம்மை நம்பி, விசுவாசிக்கின்றேன். நான் உமக்கு சாட்சியாக இருக்கும்படி உமது வல்லமையை பெற்றுக் கொள்ளும் வண்ணமாக என்னை உமது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் செய்யும். விசுவாசத்தினால், உமது பரிசுத்த ஆவியையும், பரிசுத்த ஆவியின் ஈவுகளையும், ஒரு புதிய ஜெப பாஷையையும் பெற்றுக் கொள்கின்றேன். நன்றி இயேசுவே. இதனை உமது நாமத்தினால் நான் கேட்கின்றேன். ஆமென்."

இந்த ஜெபத்தை ஏறெடுத்தப் பிறகு, உங்கள் நாவைத் திறந்து வருகின்ற வார்த்தைகளைப் பேசுங்கள். அது உங்கள் சத்தமாக, உங்கள் நாவாக இருக்கும். ஆனால் அவருக்கு உங்களை நீங்கள் அர்ப்பணிக்கையில், அவரது பேச்சு உங்களிடம் வரும். இன்னும் பேசத் தைரியப்படுகையில், பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகள் உங்களிடம் அதிகமாக வரும்.

**5 ஆம் கேள்விக்குப் பதில்: *கைகளை வைத்தல்***

முதலாவது நோக்கம் ஆசீர்வாதம்; ஒவ்வொரு சீஷரும் இதனை செய்ய முடியும் உதாரணமாக மீண்டும் பிறந்த பெற்றோர் தங்கள் குழந்தைகள் மீது கரங்களை வைத்து ஜெபிப்பது போன்று.

இரண்டாவது நோக்கம் சுகப்படுத்த; ஒவ்வொரு சீஷரும் இதனை செய்ய வேண்டும் என்று கட்டளை பெற்று உள்ளனர்.

மூன்றாவது நோக்கம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கொடுக்க; பரிசுத்த ஆவியினால் நிறைந்த ஒரு விசுவாசி இன்னொரு விசுவாசியின் மீது கரங்களை வைத்து ஜெபிக்கும் போது அந்த விசுவாசி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளமுடியும். எனினும், சில விசுவாசிகள் நேரடியாக கர்த்தரிடம் இருந்தும் அதனைப் பெற்றுக் கொள்வது உண்டு. அதற்கு ஒருவர் அவர்கள் மீது கைகளை வைக்க அவசியம் இல்லை. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் இப்படியாய் பரிசுத்த ஆவியானவரைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

நான்காவது நோக்கம் அர்ப்பணிப்பிற்கானது; மூப்பர்கள் அல்லது அதிகாரத்தில் இருப்பவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்த ஒரு விசுவாசிக்கு கர்த்தர் கொடுத்திருக்கும் அழைப்பின் பணியை செய்ய கரங்களை வைத்து அர்ப்பணிக்க முடியும். அவர்கள் அர்ப்பணிக்கப்படும் முன்பாக அந்த அழைப்பு கர்த்தரால் உண்டானதா என்று உறுதிப்படுத்த வேண்டும். ஒருவர் மீது கரங்களை வைத்து அர்ப்பணிப்பதில் அவசரம் காண்பிக்கக் கூடாது என்று 1 தீமோத்தேயு 5;22 எச்சரிக்கின்றது. சபையில் அதிகாரத்துடன் இருக்கும் மக்கள் மட்டுமே இப்படி செய்ய முடியும்.

**6 ஆம் கேள்விக்குப் பதில்: *மரித்தோரின் உயிர்த்தெழுதல்***

***அ)*** *நமது மரித்த சரீரம் புதிய உயிர்த்தெழுந்த சரீரமாக மாறும். இயேசுவானவர் பரலோகில் இருந்து வரும் போது நாம் வானில் அவரைச் சந்திப்போம். மரித்த விசுவாசிகள் முதலாவது எழுந்திருப்பார்கள். அவர்களுடன் பின்னர் உயிருடன் இருக்கின்றவர்களும் அனைத்து விசுவாசிகளுடன் வானில் இயேசுவை சந்தித்து, அவருடன் நித்திய காலமாக வாழுவார்கள்.*

***ஆ)*** *நமது உயிரடைந்த சரீரம் பழைய சரீரம் போன்று இருக்காது. அவை மகிமையுள்ளதாக, ஆரோக்கியமானதாக, முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். என்றாலும் நாம் ஒருவரை ஒருவர் அடையாளம் காண்போம்! அழிவில்லாதது, அழிவற்றது, மகிமையானது.*

***இ)*** *இயேசுவானவர் உயிர்த்தெழுந்திருக்கவில்லை என்றால், நாமும் உயிருடன் எழும்ப மாட்டோம். நாம் தேவாதி தேவனுடன் நித்திய காலமாக வாழும்படியாக இயேசுவின் மூலமாக அவர் ஒரு வழியை உண்டு பண்ணினார் என்பதே அற்புதமான சுவிசேஷம்.*

**7 ஆம் கேள்விக்குப் பதில்:** *நித்திய நியாயத்தீர்ப்பு*

***அ)*** *கர்த்தரானவர் இயேசு கிறிஸ்துவை நம் ஒவ்வொருவர் மீதும் நியாயாதிபதியாக நியமித்து இருக்கின்றார்.*

***ஆ)*** *இயேசுவானவர் தனது விசுவாசிகளை நியாயந்தீர்ப்பார். இயேசுவை உண்மையாக, கிரமமாக தங்களது ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டவர்களின் பெயர் ஆட்டுக்குட்டியானவருடைய (இயேசுவின்) கீவ புத்தகத்தில் எழுதப்பட்டு இருக்கும். அப்படி ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டு இருக்கின்றவர்கள்*

இயேசுவுடன் நித்திய காலமாக வாழுவார்கள். இயேசுவின் விசுவாசிகள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். அவர்களுக்கு அழிவில்லை. ஆதிகால முதல் அவர்களுக்கு என்று நியமிக்கப்பட்டு இருந்த நல்ல செயலை அவர்கள் செய்ததின் அடிப்படையில் அவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். இதைத் தவிர்த்து அவர்கள் செய்த எதுவும் நித்தியத்திற்குப் பிரயோஜனப்படுவதில்லை.

- சுவிசேஷத்திற்காக செய்ததும் நித்திய மதிப்புடையது.
- ஏழைகளுக்கு உதவி செய்வதும் நித்திய மதிப்புடையது.
- ஒரு விசுவாசியின் குணம் நித்தியம் வரை நிலை நிற்கும். (பரிசுத்த ஆவியின் கனி)

**இ)** இயேசுவானவர் புறஜாதிகளையும், (யூதர் அல்லாதவர்) தேசங்களையும்/ஜாதிகளையும் அவர்கள் இஸ்ரவேலரையும், யூதமக்களையும் நடத்திய விதங்களுக்கு ஏற்ப நியாயந்தீர்ப்பார்.

**ஈ)** இயேசுவை தங்களது சொந்த இரட்சகரும் ஆண்டவருமாக ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். காரணம் அவர்கள் இயேசுவை புறக்கணிக்க முடிவி செய்தார்கள். அவர்கள் நித்திய அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள். இதில் இயேசுவை சரியாக பின்பற்றாமல் மாய் மாலமான வாழ்க்கை வாழ்ந்தவர்களும், தவறான கிறிஸ்தவர்களும் சேர்க்கப்படுவார்கள்.

**உ)** இயேசுவானவர் வரும் நேரத்தை ஒருவரும் அறிவதில்லை. நித்திய நியாயத்தீர்ப்பு எப்போது நடக்கும் என்றும் அறிவதில்லை. இயேசுவானவர் கூட இதனை அறிவதில்லை. அதனை பிதாவாகிய தேவன் ஒருவரே அறிவார். நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். ஆனால் இயேசுவானவர் வரும் முன்பாக, இந்த உலகமெங்கும் உள்ள மக்கள் கேட்கும்படியாக நற்செய்தி பிரசங்கிக்கப்படும்.

---

அருள்திரு. டெரிக் பிரின்ஸ் என்பவரின் 'லேயிங்க் த ஃபௌண்டஷன்ஸ்' என்னும் போதனையில் இருந்து மேம்படுத்தப்பட்டு, டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள் இந்தியா அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இன்னும் அதிக ஆழமான போதனைக்கு, டெரிக் பிரின்ஸ்ன் 'லேயிங்க் த ஃபௌண்டஷன்ஸ்' என்னும் சிடியைக் கேளுங்கள் அல்லது "ஃபௌண்டஷன்ஸ் ஃபார் கிறிஸ்தியன் லிவிங்க்" என்னும் புத்தகத்தை வாசியுங்கள். (பல மொழிகளில் உண்டு) இதனை டெரிக் பிரின்ஸ்ன் அப்லிகேஷன் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். (அது ஸ்மார்ட் ஃபோனில் பதிவிறக்கம் செய்யப்பட முடியும்).